<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>

<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை

<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.10/2022.</u>

<u>சி.என்.ஆர். எண்.TNTU09-000555-2022</u>

வரிசை எண்.1	விளக்கம்	விவரங்கள்
1.	குற்றமுறையிடுபவர்	எஸ்.செந்தில்குமார், த/பெ.வி.சக்திவேல், 48/620, அரசமர தெரு,ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.
2.	எதிரி	கே.ஆறுமுகம், மே/பார். கார்த்திக்,கோவிந்தபுரம் கிராமம், வெங்கடசமுத்திரம் அஞ்சல், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம்.
3.	குற்றம்	138 NI ACT
4.	சம்பவம் நடந்த தேதி	10.05.2020
5.	முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்ட நாள்	31.01.2022
6.	எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்	-
7.	குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்	-
8.	கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்	06.04.2022
9.	கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள்.	1. 26.05.2025 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 6673/2023. 2.24.07.2025 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 2711/2025.
10	வழக்கின் சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்	ம.சா.1 - 26.07.2022, 19.10.2022, 21.11.2022.

11	எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள்	09.03.2023
12	எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்	–
13	தீர்ப்பு பகரப்பட்ட நாள்	15.04.2026
14	தீர்வு	கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை

<u>நீதித்துறை படிவம் எண். 61</u>

புகார்தாரர் : எஸ்.செந்தில்குமார், த/பெ.வி.சக்திவேல்

எதிரிகள் : கே.ஆறுமுகம், மே/பார். கார்த்திக்

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டனை

தண்டனை: முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.9,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.9,10,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

வரிசை எண்	எதிரியின் பெயர்	தந்தை/ கணவர் பெயர்	சாதி (அ) இனம்	தொழில்	முகவரி	வயது
1.	கே.ஆறுமுகம்	கார்த்திக்	–	–	கோவிந்தபுரம் கிராமம், வெங்கடசமுத்திரம் அஞ்சல், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம்.	52

தேதி							தாமதம் (ம) அதன் விளக்கம்.
குற்றம்	புகார் அறிக்கை	எதிரி கைது செய்யப்பட்ட நாள்	பிணையில் சென்ற நாள்	வழக்கு விசாரணையின் தொடக்கம்	வழக்கு விசாரணையின் முடிவு	உத்தரவு	...
10.05.20	31.01.22	–	–	06.04.22	09.03.23	15.04.26	–

இவ்வழக்கு கடந்த 03.03.2022 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 12.04.2026 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.உமர், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.நந்தீஸ்குமார், M.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவு 138 மற்றும் 357 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வழக்கின் சுருக்கம்

குற்றமுறையிடுவரும் குற்றம்சாட்டப்பட்டவரும் உறவினர்கள். அந்த வகையில் கடந்த 10.01.2020ம் தேதி ரூ.5,00,000/–ஐ கடனாக வாங்கி மாதத்திற்கு ரூ.2/– (ரூ.100/–)க்கு வட்டியாக கொடுத்து வந்ததாகவும், மேலும் 10.05.2020ம் தேதி ரூ.4,00,000/–மீண்டும் கடனாக வாங்கிக்கொண்டு அதன் பின்னிட்டு சரியாக வட்டி கொடுக்காமல் அலைகழிந்து வந்ததாகவும், பின் அசலை திருப்பிக்கொடுத்துவிடும்படி பலமுறை கேட்டு பின் அவர் வைத்திருந்த தேனா வங்கி தற்போது பேங்க் ஆப் பரோடாவாக செயல்பட்டு வரும் ஆம்பூர் வங்கி கிளை 10.12.2021 தேதியிட்ட காசோலை எண்.797576, ரூ.9,00,000/–கான காசோலை, 30.10.2021ம் தேதி கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை 21.12.2021அன்று அவருடைய ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி

கிளையில் வசூலுக்காக செலுத்தியதாகவும், ஆனால் மேற்படி காசோலை " **போதிய பணம் இல்லை** " என 22.12.2021 அன்று திருப்பப்பட்டதாகவும், பின் 24.12.2021ம் தேதி மேற்படி விவரத்தை குறித்து வழக்கறிஞர் அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பினை அவர் 30.12.2021 அன்று பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை, காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளார் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் காசோலையை நான் கொடுக்கவில்லை, குற்றவாளி இல்லை எனவும், பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:-</u>

ம.சா.1. குற்றமுறையிடுபவரான செந்தில்குமார் தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும் 10.12.2021ம் தேதியிட்ட தேனா வங்கி தற்போது பேங் ஆப் பரோடா, ஆம்பூர் கிளையின் 797576 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/-க்கான காசோலை அசல் ம.த.சா.ஆ.1

என்றும், 21.12.2021 ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளையில் கொடுக்கப்பட்ட செலான் ம.த.சா.ஆ.2 ஆகவும், 22.12.2021 ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசல் ம.த.சா.ஆ.3 என்றும், 24.12.2021ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு ம.த.சா.ஆ.4 என்றும், அதை குற்றம் சாட்டப்பட்டவர் பெற்றுக்கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை ம.த.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அதனை பொய் வழக்கு எனவும், புகார்தாரரிடம் பெற்ற கடனை நான் திரும்ப செலுத்திவிட்டேன், புகார்தாரரிடம் எழுதப்படாத காசோலையை தான் கொடுத்தேன், அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும் கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.

6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

" Affirmanti non neganti incumbit probatio " நிரூபிக்கும் பொறுப்பு குற்றம்சாட்டுபவரிடமே உள்ளது.

7. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:-

7(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. ம.த.சா.ஆ.1 10.12.2021ம் தேதியிட்ட தேனா வங்கி தற்போது பேங் ஆப் பரோடா வங்கி, வாணியம்பாடி கிளையின் 797576 என்ற எண்ணுள்ள

ரூ.9,00,000/-க்கான காசோலை அசல் பற்றியதாகும், ம.த.சா.ஆ.2 21.12.2021ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளையில் கொடுக்கப்பட்ட செலான் பற்றியதாகும். ம.த.சா.ஆ.3 22.12.2021ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசலில் காரணம் **" போதிய பணம் இல்லை. "** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.த.சா.ஆ.4 24.12.2021 தேதி குற்றம் முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் ம.த.சா.ஆ.5 அந்த அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பற்றியதாகும்.

7(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த நீதிமன்றம் புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளையில் **" போதிய பணம் இல்லை "** என்று திருப்பப்பட்டது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்பதை தீர்மானிக்கிறது. ம.த.சா.ஆ.4 மற்றும் ம.த.சா.ஆ.5னை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அறிவிப்பை பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7(iii). மேலும், அவரது குறுக்கு விசாரணையில் " எதிரி ஆறுமுகத்தை 20 வருடங்களாக தெரியும் என்றும், எனக்கும் எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் சுமார் 5 வருட காலமாக உள்ளது என்றால் சரிதான் என்றும், எதிரி என்னிடம் காசோலையை எப்போது கொடுத்தார் என்றால் 30.10.2021ம் தேதி கொடுத்தார் என்றும், எனக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை என்றும், நான் எதிரியிடம் பணத்தை திரும்ப பெற்ற தேதி மாதம் மற்றும் வருடத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்

என்றும், 10.12.2021ம் தேதியிட்ட காசோலையை 21.12.2021 அன்று காலதாமதமாக வங்கியில் சமர்பித்ததற்கு எவ்வித காரணமும் மனுவிலும், அறிக்கையிலும் சொல்லவில்லை என்றும், 24.12.2021 அன்று நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான் என்றும், மேற்படி அஞ்சல் அட்டையை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன் என்றும், நான் கணக்கு வைத்திருப்பது ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளை என்றால் சரிதான் என்றும், ம.த.சா.ஆ.2ல் உள்ள காசோலை எண். 619101502485 என்றால் சரிதான் என்றும், 10.05.2020ம் தேதி எதிரி என்னிடம் ரூ.4,00,000/- பணத்தை வீட்டிற்கு வந்து பெற்று சென்றார் என்றும், எதிரியிடமிருந்து ரூ.18,00,000/-யை பெற்றுக்கொண்டு அவர் பிணையமாக கொடுத்த காசோலையை பெற்றுக்கொண்டு கந்துவட்டி தொழில் செய்வதால் நான் எதிரியின் மீதும், எதிரியின் மனைவி மீதும் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல என்றும் சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

2. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமானங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ. பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு (preponderance of Probabilities) ஆகும்.

8. இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளாரா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

9. இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் செலுத்தவில்லை, பதில் அறிவிப்பு ஏதும் தராமல் இருந்ததாகவும், எனவே குற்றமுறையீட்டாளர் உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், குற்றமுறையிடுபவருக்கு காசோலை குற்றம்சாட்டப்பட்டவர் கொடுக்கவில்லை என்றும், கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டதாக புகார்தாரரே குறுக்கு விசாரணையின்போது ஒத்துக்கொண்டார் என்பதால் இவ்வழக்கில் இருந்து எதிரியைவிடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

12. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

13(i). இவ்வழக்கின் குற்றமுறையிடுபவரான செந்தில்குமார் என்பவரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் கடந்த 10.01.2021 அன்று ரூ.5,00,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டதாகவும், மேலும், 10.05.2021ம் தேதி ரூ.4,00,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி கடனை கேட்டதன் பேரில் 10.12.2021 ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவரின் தேனா வங்கி தற்போது பேங்க் ஆப் பரோடா, ஆம்பூர் கிளையின் காசோலை எண் 797576ஐ குற்றமுறையிடுபவருக்கு கொடுத்ததாகவும், 21.12.2021 அன்று குற்றமுறையிடுபவர் வங்கிக்கணக்கு வைத்துள்ள ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளையில் பணமாற்றத்திற்காக செலுத்தியதாகவும், ஆனால் மேற்படி காசோலை " போதிய பணம் இல்லை (Funds Insufficient) " என திருப்பப்பட்டதாகவும், அதன்பிறகு 22.12.2021ம் தேதி போதிய பணம் இல்லை என்ற ரிட்டர்ன் மெமோவை வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டதாகவும், குற்றமுறையிடுபவர் 24.12.2021ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவர் 30.12.2021 அன்று பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்பதும், மேலும் 10.12.2021 தேதி தேனா வங்கி தற்போது பேங்க் ஆப் பரோடா, ஆம்பூர் கிளையின்

797576 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/-க்கான காசோலை அசல் ம.த.சா.ஆ.1 என்பதும், 21.12.2021ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த செலான் ம.த.சா.ஆ.2 என்பதும், 22.12.2021ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசலில் காரணம் **" Fund Insufficient "** ம.த..சா.ஆ.3 என்பதும், 24.12.2021 தேதி குற்றம் முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு ம.த.சா.ஆ.4 என்பதும், அந்த அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை ம.த.சா.ஆ.5 என்பதும், அறிவிப்பு பெற்றுக் கொண்ட பிறகும் இன்றைய தேதி வரையிலும் காசோலைக்குண்டான தொகையை குற்றமுறையீட்டாளருக்கு அளிக்கவில்லை என்பதும், எனவே குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13(ii). மேலும், புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் " எதிரி 30.10.2021ம் தேதி காசோலையை கொடுத்தார் என சாட்சியமளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் ம.த.சா.ஆ.1ஐ தாக்கல் செய்துள்ளார் என்றும், ம.த.சா.ஆ.2ல் உள்ள காசோலை எண்.619101502485 என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் ம.த.சா.ஆ.3ஐ தாக்கல் செய்துள்ளார் என்றும், 24.12.2021ம் தேதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்று சாட்சியமளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் ம.த.சா.ஆ.4ஐ தாக்கல் செய்துள்ளார் என்றும், 30.12.2021ம் தேதி எதிரி அதனை பெற்றுக்கொண்டார் என்பதை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் ம.த.சா.ஆ.5ஐ தாக்கல் செய்துள்ளார். எனவே, இவ்வழக்கில் புகார்தாரர் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13(iii). **சட்டப்பிரிவு 139ன் கீழ் புகார்தாரர் ஒரு காசோலையை கடனை தீர்ப்பதற்காகவே பெற்றார் என்று நீதிமன்றம் கருதவேண்டும். இதை பொய் என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden Of Proof) குற்றம் சாட்டப்பட்டவரையே சாரும்.**

13(iv). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

14. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகள் புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுத்துள்ளார்களா?

இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணையின்போது புகார்தாரரிடம் " **நான் எதிரியிடமிருந்து பணத்தை திரும்ப பெற்ற தேதி, மாதம் மற்றும் வருடத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.** " என புகார்தாரர் சாட்சியமளித்ததால் புகார்தாரரே எதிரியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்று கூறி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்ட நிலையில் புகார்தாரர் குறுக்கு விசாரணையில் எதிரியிடமிருந்து காசோலை தொகையை பெற்றுக்கொண்டார் என்பதனை போதிய ஆவணங்கள் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே சுமார் 5 வருட காலமாக பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளதாக குறுக்கு விசாரணையில் புகார்தாரர் சொல்லியுள்ள நிலையில் எந்த வருடத்தில் கொடுத்த பணத்தை எதிரியிடமிருந்து பெற்றுக்கொண்டார் என்பதனையும் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கூறிய குறுக்கு விசாரணையின்போது புகார்தாரரால் சொல்லப்பட்ட " **நான் எதிரியிடமிருந்து பணத்தை திரும்ப பெற்ற தேதி, மாதம் மற்றும் வருடத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.** " இந்த ஒரு பதிலை மட்டும் வைத்துக்கொண்டு எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இயலாது என்றும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுக்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

14(i). " Omnia Praesumuntur rite et solenniter esse acta " (அனைத்து அரசு அல்லது அதிகாரப்பூர்வ செயல்களும் முறையாகவும், சரியாகவும் செய்யப்பட்டதாகவே கருதப்படும்.)

14(ii). மேலும், வங்கியின் ரிட்டர் மெமோ என்பது ஒரு முறையான ஆவணம் என்பதால் குற்றமுறையிடுபவர் தரப்பில் ம.த.சா.ஆ.2 மற்றும் ம.த.சா.ஆ.3 முறையான ஆவணங்களாக நீதிமன்றம் கருதுகிறது. பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர் தனது தற்காப்பை நிரூபிக்க தவறிவிட்டார் என்பதால் குற்றம்சாட்டப்பட்டவரின் தரப்பு வாதம் வலுவிழந்து விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

15(i). மேலும், குற்றம் சாட்டப்பட்டவரிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் பொய் வழக்கு, புகார்தாரரிடம் பெற்ற கடனை நான் திரும்ப செலுத்திவிட்டேன் என்றும், புகார்தாரரிடம் நான் எழுதப்படாத காசோலையை தான் கொடுத்தேன் என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை நிரூபிக்கும் வண்ணம் எவ்வித சான்றாவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எழுதப்படாத காசோலையை கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் இந்த காசோலையானது எதிரியுடையது தான் என்பதை குற்றம்சாட்டப்பட்டவரே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அந்த காசோலையானது எழுதப்படாமல் தான் கொடுத்ததாகவோ, அதை நிரூபிக்கும் பொருட்டு கையெழுத்து நிபுணரின் பரசோதனைக்கு அனுப்புவதற்காகவோ எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதால் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் தனது தரப்பு உண்மையை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம் திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.** மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்படவரின் கடமை என கூறுகிறது.

15(ii). ஆனால், எதிரி தனது முதல் கேள்வியில் குற்றம் குறித்து வினாவிய போது, பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்று கூறியுள்ளாரே தவிர பணம் எதுவும் வாங்கவில்லை என்று மறுத்து கூறவில்லை என்பதாலும், இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரால் தான் காசோலையானது புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் காசோலையானது எதிரி வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. அந்த அனுமானத்தை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட போதிலும் சாட்சிகள் அதனை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர் தனது கடமையை தவறவிட்டதாகவே நீதிமன்றம் கருதுகிறது.

16(i). குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.5 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை, குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

16(ii). மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கபட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

17. இவ்வழக்கில் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138 ன் கீழ்

குற்றஞ்சாட்டபட்டவர் குற்றவாளி என தீர்மானிக்கபட்டதினால் குற்றமுறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதி உடையவர் ஆவார். வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், குற்றமுறையீட்டாளருக்கு காசோலை தொகையான ரூ.9,00,000 + செலவுத் தொகை ரூ.10,000/- மொத்தம் ரூ.9,10,000/-த்தை இழப்பீடாக குற்றமுறையீட்டாளருக்கு வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

18. முடிவாக, குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கபட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.9,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.9,10,000/- குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>இணைப்புகள்</u>

<u>குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்</u>

1.	ம.சா.1	திரு. செந்தில்குமார்

<u>குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்</u>

1.	ம.த.சா.ஆ.1	10.12.2021ம் தேதியிட்ட தேனா வங்கி தற்போது பேங்க் ஆப் பரோடா, ஆம்பூர் கிளையின் 797576 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/-க்கான காசோலை அசல்.
2.	ம.த.சா.ஆ.2	21.12.2021ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடியில் கொடுக்கப்பட்ட செலான்.
3.	ம.த.சா.ஆ.3	22.12.2021ம் தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசல்.
4.	ம.த.சா.ஆ.4	24.12.2021ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு.
5.	ம.த.சா.ஆ.5	30.12.2021 ம் தேதியிட்ட மேற்கண்ட சட்ட அறிவிப்பை குற்றம் சாட்டப்பட்டவர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல்.

<u>குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை.

<u>குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை.

<u>குறிப்பு</u>

1. வழக்கின் முடிவு குற்ற முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. கு.வி.மு.ச பிரிவு 204ன் கீழ் எதிரிக்கு இலவசமாக தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.
3. எதிரி கு.வி.மு.ச. பிரிவு 389 (3) மனுவின் பேரில் தண்டணை காலம் 1 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

ஒம்/-கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.